# வேஸ் ட்ரெஸ்

***இன்னிக்கு வீடியோல, வேஸ் டிரெஸ் எப்படி தைக்கறதுன்னு நாம கத்துக்கப் போறோம்.***



**தேவைப்படும் பொருள்கள்**


45 அங்குல அகலத்தில 2 மீட்டர் துணி
நெக் ஃபேசிங்க்கு ¼ மீட்டர் காட்டன் துணி
வேஸ் ட்ரெஸ்க்கான டெம்ப்ளேட், இதை நீங்க எங்க www.ushasew.comங்கற வெப் சைட்லேந்து டவுன்லோட் செய்துக்கலாம்
சாக்
கத்தரிக்கோல்
அளக்கற டேப்
ஸ்கேல்
மணிகோர்த்த பின்
மேட்சிங் நூல்
கை ஊசி.



இந்த வீடியோல, நாம டெம்ப்ளேட்டை பேஸ் பண்ணி துணிய கட் பண்ணப் போறோம், தோள்களை தைச்சு முன், பின் பக்க பீஸ்களை ஜாயின்ட் பண்ணலாம், அப்றம் நெக் ஃபேசிங் தைக்கணும், சைட் சீம்ஸ தைச்சு அப்புறம் ஸ்லீவ்ஸ், டிரஸ் பாட்டமையும் ஹெம் பண்ணனும். சரி தொடங்கலாம் வாங்க.




**ஸ்டெப் 1 டெம்ப்ளேட் மேகிங், கட்டிங்**




துணிய பிரிச்சு, டேபிள் மேல விரிக்கணும், ரைட் சைட் மேல்பக்கம் நோக்கி இருக்கணும். அப்றம் வீடியோல காட்டியிருக்க மாதிரி அதை ரெண்டு பக்கத்துல இருந்தும் உள்புறமா மடிங்க. www.ushasew.com ல் இருந்து டவுன்லோட் செய்த வேஸ் டிரெஸ்சோட முன்பக்க டெம்ப்ளேட்டை துணி மேல வையுங்க. டிரெஸ்சோட சைட்-அ மடிப்புல கரெக்டா பிளேஸ் பண்றதை உறுதி செய்துக்கங்க. டெம்ப்ளேட்டை சரியான இடத்தில் சில மணிகோர்த்த பின்களால பின் பண்ணிருங்க. அப்றம் துணியோட பின் டெம்ப்ளேட்டை டிரெஸ்சோட வேற சைட்-ல வையுங்க. பின்பக்க டெம்ப்ளேட்டோட ஆன்-ஃபோல்ட் பகுதியையும் கவனத்தில வெச்சிக்கங்க. துணியோட சேர்த்து டெம்ப்ளேட்டை பின் பண்ண மணிகோர்த்த பின்களை யூஸ் பண்ணுங்க.





அடுத்து, சாக்-அ எடுத்துகிட்டு துணி மேல ரெண்டு டெம்ப்ளேட்டயும் ட்ரேஸ் பண்ணுங்க. முன் டெம்ப்ளேட்ல தொடங்கி ஒட்டுமொத்தமா ட்ரேஸ் பண்ணுங்க. மார்க் பண்றப்ப நீங்க டெம்ப்ளேட்ல ஒரு நோட்ச்-அ கவனிச்சிருக்கலாம், துணிலயும் அந்த நோட்ச்-அ மார்க் பண்ணுங்க இதுதான் நம்ப ஸ்லீவ் ஓபனிங்கா இருக்கும்.





பின் டெம்ப்ளேட்டுக்கு போய் அதையும் ட்ரேஸ் பண்ணுங்க. வளைவு, எட்ஜஸ்ல கவனமா ட்ரேஸ் பண்ணனும். அப்புறம் பின் டெம்ப்ளேட்ல ஸ்லீவ் ஓபனிங் நோட்ச்-அயும் மார்க் பண்ண மறந்துராதீங்க.




டெம்ப்ளேட்ஸ்ல இருந்து பின்-அ எடுத்துட்டு தனியா வெச்சிருங்க. ட்ரேஸ் பண்ணின லைன் மேல கத்திரிகோலால கட் பண்ணுங்க. இந்த பேட்டன் நல்லபடியா வர்றதோ, வராம போறதோ இதுலதான் இருக்கின்றதால துல்லியமா கட் பண்றதை உறுதி செய்துக்கணும். மொத்த துணிய கட் பண்ணிட்டு அதிகப்படியா உள்ள துணிய தனியா வெச்சிருங்க. பாருங்க, இதுதான் முன் பக்கம், இதுதான் பின் பக்கம்.



**ஸ்டெப் 2 முன், பின் பக்க பீஸச ஒன்னா ஜாயின்ட் செய்தல்**

இப்ப துணிய பிரிச்சு வீடியோல காட்டியிருக்க மாதிரி பின் பீஸ் மேல முன் பீஸயும் ரைட் சைட்-அ நோக்கி ரைட் சைட் இருக்கற மாதிரியும் வையுங்க. இதுதான் நம்ப நெக்லைன் அப்புறம் தோள்களா இருக்கும்.














மறுபடியும் சில மணிகோர்த்த பின்களை எடுத்து தோளை பின் பண்ணுங்க, துணியோட ரெண்டு அடுக்குலயும் பின் நுழையறதை உறுதி செய்துக்கங்க. இப்ப துணியோட முன் பீஸ் மேல முன் டெம்ப்ளேட்ட ரீ-ப்ளேஸ் பண்ணி அதுக்கு மேல நோட்ச் மார்க் பண்ணுங்க. டெம்ப்ளேட்ட தனியா எடுத்து வையுங்க. இப்ப பின் பண்ணி வெச்சிருக்கற துணிய உஷா ஜானோம் ட்ரீம் மேக்கர் 120 தையல் மிஷினுக்கு எடுத்துட்டுப்போங்க. தைக்க தொடங்கறதுக்கு முன்னால, மிஷினை நேர் தையலுக்கு செட் பண்ணியிருக்கறதை உறுதி செய்துகிட்டு, தையல் நீளத்தை 2.6ஆ அதிகரிச்சிக்கங்க. ஷோல்டரோட எட்ஜ பிரஸ்ஸர் ஃபூட்ல அலைன் பண்ணிகிட்டு தைக்கத் தொடங்குங்க. துணியோட ஆரம்பத்திலயும் முடிவுலயும் நாம ரிவர்ஸ் ஸ்ட்ரிச் போடுவோம். நெக் வர்றவரை தொடர்ந்து தைக்கணும், அப்படி தைக்கறப்ப பின்-அ எடுத்துட்டே போகணும். கொஞ்சம் ரிவர்ஸ் ஸ்ட்ரிச் போட்டுட்டு நூலை கட் பண்ணிருங்க. அதே போல, இன்னொரு ஷோல்டரை தையுங்க. ஆரம்பத்திலயும் முடிவுலயும் ரிவர்ஸ் ஸ்ட்ரிச் போடறதை மறந்துராதீங்க. ஷோல்டர் தைக்கறப்ப பின்-அ கவனமா எடுக்கணும். நூலை கட் பண்ணுங்க அவ்ளோதான்.






துணி முனைல நூல் பிரிஞ்சு வர்றதை தவிர்க்க, நேர் தையலுக்கு மேல ஜிக் ஜாக் தையல் போடுவோம். மிஷின்ல சும்மா ஜிக் ஜாக் பட்டனை அழுத்திட்டு தைச்சிரலாம். ஜிக் ஜாக் தையலுக்கு ரிவர்ஸ் ஸ்ட்ரிச்லாம் போட தேவையில்லை. ரெண்டு ஷோல்டர் முழுக்க ஜிக் ஜாக் தையலை போடணும். நேர்த்தியான ஃபினிஷிங் வர அதிகமா உள்ள நூலை கத்திரிக்கோலால கட் பண்ணுங்க. ஷோல்டர் தைச்சு முடிச்ச பிறகு பாக்க இப்படித்தான் இருக்கணும்.



ஸ்டெப் 3 நெக் ஃபேசிங் தயாரித்தல், அதை நெக்லைனுடன் இணைத்தல்






இப்ப வெள்ளை காட்டன் துணிய எடுத்துகிட்டு, அதுல ¼ பங்கை வீடியோல காட்டியிருக்க மாதிரி மடிங்க. Thenஅப்றம் முன் முன் டெம்ப்ளேட்ட எடுதுகிட்டு துணி மேல வையுங்க. டெம்ப்ளேட்ட வைக்கறதுக்கு முன்னால மனசுல பின்பக்க டெம்ப்ளேட்ட வைக்கறப்ப கவனத்தில வெச்சிக்க வேண்டிய ஒரு விஷயம், ஆன்-ஃபோல்ட் பகுதி சரியா மடிப்புல வைக்கப்பட்டிருக்காங்கறதை உறுதி செய்துக்கங்க. இப்போ, ஒரு சாக்-அ எடுத்து நெக்லைனையும் ஷோல்டரோட ஒரு சின்ன பகுதியையும் ட்ரேஸ் பண்ணிக்கங்க. மார்க் பண்ணின லைன்லிருந்து ஒன்னரை அங்குலம் அளந்து மார்க் பண்ணிகிருங்க. இதேபோல லைன் மேல இன்னும் ஒரு பாயின்ட் மார்க் பண்ணுங்க. ஒரு ஸ்கேலை எடுத்துகிட்டு இந்த புள்ளிகளை நேர்கோடா ஜாயின்ட் பண்ணுங்க. இந்த கோடு ஷோல்டர் மார்கிங் வரை போகறதை உறுதி செய்துக்கங்க, இப்ப நமக்கு ஒரு செவ்வக வடிவம் கிடைக்கும்.துணியிலிருந்து இதை கட் பண்ணுங்க. இது முன் கழுத்துக்குப் பொருத்தப்பட்ட ஃபேசிங் ஸ்ட்ரிப்பா இருக்கும். இதை தனியா வையுங்க.










அடுத்து, மீதி இருக்கற துணிய வெச்சு, வீடியோல காட்டியிருக்க மாதிரி இன்னொரு பக்கத்தை மடியுங்க. அதுக்கு மேல பின் டெம்ப்ளேட்டை வையுங்க, மடிப்புல இருக்க வேண்டிய பகுதி ஃபோல்ட்ல இருக்கறதை உறுதி செய்துக்கங்க. அப்புறம் முன் பக்க டெம்ப்ளேட்டுக்கு செய்த மாதிரியே நெக்லைனையும் ஷோல்டரோட சின்ன பகுதியையும் ட்ரேஸ் பண்ணிக்கங்க. ட்ரேஸ் பண்ணின பிறகு, அளக்கற டேப்-அ எடுத்துட்டு ஒன்னரை அங்குலம் அளந்துகிட்டு மார்க் பண்ணிக்கங்க. ஒரு ஃப்ரீ-ஹான்ட் வளைவ சுலபமா உருவாக்க இதை நெக்லைன் முழுக்க செய்யுங்க. உருவாக்கின புள்ளிகளை ஜாயின்ட் பண்ணுங்க. இதை செய்து முடிச்சதும், ஃபேசிங்-அ கட் பண்ணுங்க. வளைவுகள்ல கவனமா கட் பண்ணுங்க. உங்க முன், பின்பக்க ஃபேசிங் பாக்க இப்படி இருக்கணும். ஃபேசிங்ஸ ஓபன் பண்ணுங்க. இப்ப நாம ஷோல்டரை ஜாயின்ட் பண்ணனும். வி-வடிவ நெக் ஃபேசிங்ல பேக் ஃபேசிங்-அ வையுங்க. ரைட் சைட், ரைட் சைட்-அ நோக்கி இருக்கறதை உறதி செய்துகிட்டு வீடியோல காட்டியிருக்க மாதிரி பின் பண்ணுங்க.




பின் பண்ணின ஃபேசிங்ஸ உங்க மிஷினுக்கு கொண்டு போங்க. தைக்கறதுக்கு முன்னால மிஷின் நேர் தையல்ல இருக்கறதை, தையல் நீளம் 2.6ஆ இருக்கறதையும் உறுதி செய்துக்கங்க. ஸ்ட்ரிப்போட எட்ஜ பிரஸ்ஸர் ஃபூட்டோட அலைன் பண்ணிகிட்டு பின் பண்ணின பகுதிய தையுங்க. ஃபேசிங் ஸ்ட்ரிப் மாதிரியான ஒரு சின்ன விஷயத்துக்குகூட ரிவர்ஸ் ஸ்ட்ரிச் முக்கியம். பின் பண்ணின ரெண்டு பக்கத்தையும் தைச்சிருங்க. இது முடிஞ்சதும், உங்க தையல் பாக்க இப்படி இருக்கணும்.




Tஇதுவரை மெயின் துணில ஷோல்டர் தைச்சு முடிச்சிருக்கோம். அடுத்து, நாம பாக்க வேண்டிய விஷயம் நெக்லைன், நெக் ஃபினிஷிங்குக்கு நெக் ஃபேசிங்-அ எடுங்க. இதுல நாம ஷோல்டர்ஸ் தைச்சிட்டோம். இப்ப மெயின் துணிய ஓபன் பண்ணி open the main fabric and match the neckline of the fabric with the ஃபேசிங்கோட நெக்லைன மேட்ச் பண்ணுங்க, ரைட் சைட் ரைட் சைட்-அ நோக்கி இருக்கான்னு பாத்துக்கங்க. ஸ்ட்ரிப்போட வி-ஷேப்-அ நெக்லைனோட அலைன் பண்ணிகிட்டு மணி கோர்த்த சில பின்ஸ் வெச்சி அதை சரியான இடத்தில பின் பண்ணுங்க. மொத்த ஸ்ட்ரிப்பயும் இதே மாதிரி பின் பண்ணுங்க. இப்ப நாம பின் பண்ணின பகுதிகள ஒட்டி தைக்கணும்.




நெக்லைனை பிரஸ்ஸர் ஃபூட்ல அலைன் பண்ணிகிட்டு தைக்க ஆரம்பிங்க. நெக்லைன் முழுக்க தைக்கணும், அப்படி தைக்கறப்ப பின்ஸ எடுத்துட்டே போகணும்.




முனைக்கு போய் சேர்றப்ப, பிவோட்டிங் டெக்னிக்க யூஸ் பண்ணுங்க, அதாவது ஊசிய துணில வெச்சிகிட்டே துணிய திருப்புங்க, இப்படி செய்யறதால நேர்த்தியான ஒரே தையல் வர்றதை உறுதி செய்யும். செய்து முடிச்சதும் நூலை கட் பண்ணிருங்க. தையல் பாக்க இப்படி இருக்கணும்.
இப்ப பாருங்க நாம நெக்லைனை தைச்சு முடிச்சிட்டோம். வி-ஷேப்ல ஒரு நோட்ச் குடுங்க, தையலை கட் பண்ணாம இருக்கறத உறுதி செய்துக்கங்க. ஸ்ட்ரிப்போட வட்டப் பகுதிலயும்கூட நாம நோட்ச்ஸ உருவாக்கணும், அப்பதான் டிரெஸ்ஸ போட்டுக்கறப்ப துணி சரியா படிஞ்சு இருக்கும். இது முழுக்க அப்பறம் ஸ்ட்ரிச் லைனுக்கு மேலயும் நோட்சஸ் உருவாக்கணும்.

**ஸ்டெப் 4 ஸ்லீவ்ஸ் ஹெம் செய்தல்**




இப்ப நாம ஸ்லீவ்ஸ் தைக்கலாம். துணியை முழுசா ஓபன் பண்ணி, பக்கங்கள்ல நாம உருவாக்கின மார்க்கை கண்டுபிடிக்கணும். இப்ப ஷோல்டர்ஸ்லேந்து மடிச்சு மார்க்ஸ் மேட்ச் ஆகறதை உறுதி செய்துக்கங்க. அப்புறம் மெட்டீரியலை பின் பண்ணி இந்த மார்க்கிங்ல ஒரு நோட்ச் உருவாக்குங்க, அடுத்த பக்கத்துக்கும் இதே மாதிரி பின் பண்ணி, மார்க்கிங்ல நோட்ச் உருவாக்குங்க.






இப்ப நாம ஸ்லீவ்ஸ ஹெம் பண்ணனும். இதுக்கு நாம துணிய முன்பக்க நோட்சில இருந்து பின் பக்க நோட்ச் வரை ஒரு கால் அங்குலத்துக்கு ரெண்டு தடவை மடிக்கணும். எட்ஜ பிரஸ்ஸர் ஃபூட்டோட அலைன் பண்ணி தைக்க ஆரம்பிக்கணும். தைக்கறப்ப மடிச்சிட்டே போகணும். ஷோல்டர் முழுக்க தைச்சிட்டே போய் இன்னொரு முனைல உள்ள நோட்ச் வரும்போது நிறுத்தணும். நூலை கட் பண்ணனும். நீங்க மடிச்சிருக்கறது நேர்த்தியா, சீரா இருக்கற மாதிரி பாத்துக்கங்க. அடுத்த பக்கத்துக்கும் இதே பிராசஸ ரிபீட் பண்ணுங்க. இதை செய்து முடிச்சதும், நூலை கட் பண்ணனும். நீங்க தைச்சு முடிச்சது பாக்க இப்படி இருக்கணும்.

**ஸ்டெப் 5 பக்க சீம் முடித்தல், டிரெஸ்-ன் அடிப்பகுதி ஹெம்மிங் செய்தல்**



பக்கங்களை ஜாயின்ட் பண்ணுங்க, ரைட் சைட் ரைட் சைட்-அ நோக்கி இருக்கணும் தைக்க சுலபமா இருக்க மணி கோர்த்த சில பின்ஸ் வெச்சி சரியான இடத்தில பின் பண்ணுங்க. வீடியோல காட்டி இருக்க மாதிரி பின் பண்ணின பகுதிய நாம தைக்கப் போறோம். டிரெஸ் அடிப்பகுதியையும் நாம ஹெம் பண்ணுவோம். பின் பண்ணின பகுதிய பிரஸ்ஸர் ஃபூட் எட்ஜ்ல அலைன் பண்ணி தைக்க ஆரம்பிங்க. ஒருசில ரிவர்ஸ் ஸ்ட்ரிச் போட்டுட்டு அப்புறம் நார்மலா தைச்சிருங்க. தைச்சிட்டே பின்ஸ நீக்கிருங்க. முனைக்கு வரும்போது, நூலை கட் பண்ணுங்க. தைச்சது பாக்க இப்படி இருக்கணும். அடுத்து, அடுத்த பக்கத்துக்கு போய் இதே பிராசஸ ரிபீட் பண்ணுங்க. மெதுவா, சீரா கீழ்நோக்கி போங்க. இது முடிஞ்சதும், உங்க உஷா ஜானோம் ட்ரீம் மேக்கர் 120 தையல் மிஷின்ல ஜிக் ஜாக் பட்டனை அழுத்திட்டு பக்க சீம்ஸ்ல ஜிக் ஜாக் தையல் போடுங்க. இது திரும்ப திரும்ப செய்யற ஒரு பிராசஸ். ஆனா எங்களை நம்புங்க, இது நம்ப துணிக்கு ரொம்ப அருமையான நேர்த்தியான தோற்றத்தை தரும். ரெண்டு பக்கங்கள்லயும் ஜிக் ஜாக் தையல் போடுங்க.







டிரெஸ் அடிப்பகுதிய ஹெம் பண்ணனும். டிரெஸ்-ன் அடிப்பகுதிக்கு போய், ஸ்லீவ்ல செய்த மாதிரியே துணிய ஒரு கால் அங்குலத்துக்கு மடிக்கணும், அப்புறம் ¾ அங்குலம் மடிக்கணும். தையல் நீளத்தை 2.6ஆ வெச்சிகிட்டு மடிப்புல தையுங்க. அது முழுக்க மடிச்சிகிட்டே தைச்சிட்டே போகணும். உங்க மடிப்பு நேர்த்தியா இருக்கணும். இது முடிஞ்சதும், நூலை கட் பண்ணிட்டு, துணிய திருப்பிக்கங்க.

**ஸ்டெப் 6 நெக்லைனை முடித்தல்**





இப்ப கழுத்துப்பகுதிய முடிக்கப்போறோம். ஃபேசிங் ஸ்ட்ரிப்ப மடிச்சு வேற பக்கமா மடிச்சு கையால தையல் போடுங்க. இதை ஃபினிஷ் பண்ண, ஃபேசிங் ஸ்ட்ரிப்ப தைச்சிட்டு இருக்கறப்ப அடிப்பகுதியை வீடியோல காட்டி இருக்கற மாதிரி ¼ அங்குலத்து மடிச்சிக்கங்க. ஒட்டுமொத்த நெக்லைனையும் தைச்சு முடிங்க. உங்க கை தையல் பாக்க இப்படி இருக்கணும்..



இதுவரை நாம, சைட் சீம்ஸ் தைச்சிருக்கோம், ஸ்லீவ்ஸ் ஹெம் பண்ணிட்டோம், ஷோல்டர்ஸ் தைச்சாச்சு, அப்புறம் நெக்லைன் முடிச்சிட்டோம். இப்ப மேற்கொண்டு உங்க டிரெஸ்ஸ உங்களுக்கு பிடிச்ச மாதிரி ஆக்ஸ்சரிஸ் வெச்சிட்டு அழகுபடுத்திக்கலாம். எங்க துணிக்கு நாங்க ஊதா கலர் ஃபெதர்ஸ் சேர்திருக்கோம் எங்களுக்கு இது ரொம்ப பிடிச்சிருக்கு. இந்த வீடியோ உங்ளுக்கு பிடிச்சிக்கான்னு சொல்லுங்க, கமென்ட்ஸ்ல வேற என்ன சொல்லணும் நீங்க விரும்பறீங்க. அதை சொல்லுங்க இந்த வீடியோவ லைக் பண்ண மறக்காதீங்க அப்புறம் வேஸ் டிரெஸ் தயாரிக்க விரும்பற உங்க நண்பர்களோட இதை ஷேர் பண்ணிக்கங்க.